1995 நவம்பர் 8]

Dr. BEATRIX D' SOUZA: Hon. Speaker Sir, I understand that the Government stated that the former Governor's House, which now temporarily houses the Police Headquarters, is going to be renovated and then treated as a heritage building under the Heritage Act. The open spaces in front of this building were at one time very well maintained. I would suggest that we have a garden, or a green park, or a rose garden there. If this particular subject does not come under the purview of the Transport Department, I would request that the Hon. Minister for Transport may kindly recommend my proposal to the Hon. Minister for Public Works Department.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப்போல அரசு திறந்தவெளி நிலங்கள் என்று சொல்வது, பொதுப்பணித் துறை நிர்வாகத்திலே இருக்கிற காரணத்தினாலே சிறு சிறு பூங்காக்களை பொதுப் பணித் துறையே நிர்வகிக்க இருக்கின்றது. பல்வேறு இடங்களில் அதைப் பராமரித்து வருகிறது. ஆகவே பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் அதை ஆய்வுசெய்து நடவடிக்கை மேற்கொள்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு உணவு அமைச்சர்.

47—

உரிமம் இன்றி நெல் கொள்முதல் செய்வோர்மீது நடவடிக்கை

84144–திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரசு உரிமம் இன்றி நெல் கொள்முதல் செய்யும் தனியார் விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உரிமம் இன்றி நெல்/அரிசி வியாபாரம் செய்வது சட்டத்திற்குப் புறம்பானது. எந்த நபர் அதில் ஈடுபட்டாலும் சட்டப்படி நடவடிக்கை

[*1995 நவம்பர் 8*

எடுக்கப்படும். விவசாயிகள் தாங்கள் விளைவித்த நெல்லை வரம்பின்றி இருப்பு வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் நெல் உற்பத்தி செய்த பிற விவசாயிகளிடமிருந்து வியாபார நோக்கத்தோடு நெல் கொள்முதல் செய்தால் அவர்கள் தமிழ்நாடு இன்றியமையாப் பொருள்கள் (வர்த்தக ஒழுங்குமுறை) 1984-ஆம் ஆண்டின் ஆணையின்படி உரிமம் எடுக்கவேண்டும். இதைக் கட்டாயமாக செயல்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் துறை எடுத்து வருகிறது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வியில் வியாபாரிகள் என்று குறிப்பிட்டு இருந்தேன். அது விவசாயிகள் என்று தவறுதலாக அச்சிடப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது தட்டுப்பாடின்றி குறைந்த விலையில் கிடைப்பதற்கு ஏதுவாக 40 ஆண்டுகளுக்கு முன்பு மூதறிஞர் இராஜாஜி அவர்கள் நெல், அரிசி கட்டுப்பாட்டை நீக்கியதைப் போல மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் துணிச்சலாக இந்தத் தட்டுப்பாட்டை நீக்கி ஏகபோக...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி மரியம் உல் ஆசியா, 'நான் வியாபாரிகள் என்று கொடுத்திருந்தேன்; தவறுதலாக விவசாயிகள்' என்று அச்சிடப்பட்டதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்ததே 'விவசாயிகள்' என்று தான். அதாவது, சில நேரங்களில் உறுப்பினர்கள், யாராவது டைப் செய்து தருகிற கேள்விகளுக்கு கையெழுத்து போட்டு விடக் கூடாது. திருமதி மரியம் உல் ஆசியா.

முற்பகல் 10.30

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், துணிச்சலாக இந்தக் கட்டுப்பாட்டை நீக்கி, ஏகபோக கொள்முதல் திட்டம் கைவிடப்பட்டு நேரிடைக் கொள்முதல் திட்டம் கொண்டு வந்ததால், இன்று அரிசி விலை குறைக்கப்பட்டு சீராக இருப்பதை பொது மக்கள் பாராட்டுகிறார்கள். இந்த இரட்டைக் கொள்முதல் திட்டத்தில் விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்கிறது என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் நடத்திய ஆராய்ச்சி மூலம் தெரிகிறது. இந்தத் திட்டத்தை விவசாயிகளும் பாராட்டுகிறார்கள். இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, நெல் ஏஜண்டுகள் தனியார் வியாப்பாரிகளுக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லை 'பில்' போடாமல்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 நவம்பர் 8]

வாங்கி மாநிலத்தின் எல்லையோரப் பகுதிகள் வழியாக வெளி மாநிலங்களுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக எல்லையோரப் பகுதிகளில் ஏறத்தாழ 64 சுங்கச் சாவடிகள் இயங்கி வருகின்றன. அது மட்டுமல்லாமல் துறை, கொள்முதல் நேரத்தில் ஆங்காங்கே டெப்போக்களை அமைத்து, வியாபாரிகளிடத்திலேயிருந்து 'பேரலல் புரொக்கியூர்மெண்ட்' வாயிலாகக் கொள்முதல் செய்கிறது. ஆகவே இந்தத் துறை, கொள்முதல் நேரத்தில் தீவிரமாகப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சி. ஆர். 1009 ரக அரிசிக்கு கேரளாவில் நல்ல கிராக்கி இருக்கிறது. காவிரி டெல்டா பகுதியில் அதிகம் விளையக்கூடிய இந்த சி. ஆர். 1009 ரக நெல்லை, அரிசி ஆலை அதிபர்கள் மற்றும் வியாபாரிகள் கொள்முதல் செய்வதால் கடத்தலை ஊக்குவிப்பதாக இருக்கும் என்ற காரணத்தினால், இந்த ரக நெல்லை வியாபாரிகளும் அரிசி ஆலை அதிபர்களும் கொள்முதல் செய்வதைத் தடை செய்து, அரசாங்கமே கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா என்றும், அதே போன்று தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நெல்லைக் கொள்முதல் செய்வதில் விவசாயிகளுக்கு மேலும் சலுகைகள் அளிக்கப்படுமா எனவும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1009 ரக அரிசி என்பது சாதா ரக அரிசி. சம்பா புரொக்யூர்மென்ட் டைமிலே, சம்பா அறுவடை நேரத்தில் இந்த சாதா ரக அரிசியை உற்பத்தி செய்து, அதை பேரலல் புரொக்யூர்மென்ட் வாயிலாக நாம் கொள்முதல் செய்து கொண்டு வருகிறோம். இப்போது 100 பெர்சன்ட் லெவி இருக்கிற காரணத்தால், வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்லுகிறவர்கள் 100 சதவீத லெவியை செலுத்திவிட்டு எடுத்துச் செல்லலாம் என்றிருக்கிறது. அதற்கு மேல் எடுத்துச் செல்லுகிறவர்கள் மீது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. விவசாயிகளுக்கு, தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, மனித நேயம் மிக்க தலைவி, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறார்கள். விவசாயிகளுடைய நலனுக்காகத்தான் பேரலல் புரொக்யூர்மென்ட் நிலையைக் கொண்டு

வந்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்.

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 60 இடங்களில் அண்டை மாநிலப் பகுதிகளில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். இந்தச் சோதனைச் சாவடிகளைத் தவிர்த்து வேறு வழிகளிலேயும் நெல்லையும் அரிசியையும் கடத்துகிறார்கள். இப்படிக் கடத்துவதைத் தடுப்பதற்கு ஏதாவது சிறப்புத் திட்டம் உள்ளதா? இதுவரை இந்த 60 சோதனைச் சாவடிகளில் எவ்வளவு நெல் கைப்பற்றப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 64 சுங்கச்சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதுதவிர, தற்போது நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்தத் துறையைத் தீவிரப் படுத்துவதற்காக அதிகாரிகளை-ஃபுட்செல் அபிஷியல்ஸை-ஒரு அடிஷனல் டி.ஜி.பி. லெவலில் போட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு புரொக்கியூர்மென்ட் நேரத்தில் மிகத் தீவிரமாகக் கொள்முதல் செய்ய வேண்டும் என்பதற்காக நமக்கு குறுவை கிராப் பெயிலியூர் ஆனதினால், சம்பாவில் சேர்த்து புரொக்கியூர்மென்ட்டை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக, புரட்சித் தலைவி அவர்கள் அனைத்து நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்ற ஆணையை துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். அருமை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு நெல்லைக் கைப்பற்றியிருக்கிறீர்கள் என்பதைக் குறித்து கேட்டார்கள். அதுகுறித்து இப்போது குறிப்புகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடுவார்களேயானால், அதற்கான விளக்கத்தைத் தர முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைசசர் அவர்கள் 64 இடங்களில் சோதனைச் சாவடிகள் அஸ்மைத்து இருப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்கு நாகை காயிதே மில்லத் மற்றும், தஞ்சை மாவட்டங்களில் விவசாயிகள் உற்பத்தி

1995 நவம்பர் 8]

செய்யக்கூடிய குறுவை நெல் அனைத்தும் நேரடியாக கொள்முதல் நிலையம் மூலமாக கொள்முதல் செய்யப்படவில்லை. விவசாயிகள் நெல்லை விற்பதற்கு முடியாத ஒரு சூழ்நிலையில் இன்றையதினத்தில் அவர்கள் தனி வியாபாரிகளைத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நேரத்தில் அனுமதி இல்லாதவர்கள், லைசன்ஸ் பெறாதவர்கள் நெல்லைக் கொள்முதல் செய்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆக, அரசாங்கமே நெல்லைக் கொள்முதல் செய்ய முன்வருமா, இன்றைக்கே அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் தாங்களாகவே அரசுக்கு நெல் தருவதற்கு முன்வருவார்களேயானால் நாங்கள் கொள்முதல் செய்வதற்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. ஆனால் இரட்டைக் கொள்முதல் இருக்கிற காரணத்தினால் நாங்கள் யாருமே வற்புறுத்த இயலாது. விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டு இருக்கிற புரட்சித் தலைவி, விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு, தூய எண்ணத்தோடு, ஏழைகளை வாழ வைக்க வேண்டும் என்ற பரந்த உள்ளத்தோடு, சாதாரண ஏழை விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான், இந்தத் திட்டத்தை அனைவருடைய ஆலோசனைக்கு இணங்க, அனைத்து ஏழை விவசாயிகளுடைய நலனுக்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள். விவசாயிகளாகவே முன்வந்து தர முன்வருவார்களேயானால் நாங்கள் கொள்முதல் செய்வதற்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

48—

அருமனை ஆற்றூர் சாலையில் பாலம் கட்டுதல்

**11811–திரு. இரா. அப்பு நடேசன்:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--